**செப்டம்பர் – 30**

# TNPSC துளிகள்

- இந்திய நாடானது 12வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் (2025) போட்டியினை முதல் முறையாக செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 ஆம் தேதி வரையில் புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- கூகுள் நிறுவனமானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் தேதியன்று தனது 27வது உருவாக்கத் தினத்தினைக் கொண்டாடியது.
- மாற்றிக் கொள்ளும் வகையிலான மின் கலங்கள் கொண்ட இந்தியாவின் முதல் மின்சார கனரக சரக்குந்துகள் ஆனது நவி மும்பையில் ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையத்தில் (JNPA) கொடியசைத்து தொடங்கி வைக்கப் பட்டன.
- நிகழ்நேர கூட்டக் கணிப்பு மற்றும் விரைவான வரிசை மேலாண்மையினை வழங்குவதற்காக, திருமலையில் பக்தர்/யாத்ரீகர்களுக்கான செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்தக் கட்டளை வழங்கீட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் திறந்து வைத்தார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, செயற்கை நுண்ணறிவு, திறன் கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகளின் சிறப்பு மையமாக இந்திய அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆசிய நீர்நிலை சாகச சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளானது அகமதாபாத்தில் உள்ள புதிதாக திறக்கப்பட்ட வீர் சவர்க்கர் விளையாட்டு வளாகத்தில் நடைபெற உள்ளது.
- HSBC ஆனது IBM நிறுவனத்துடன் இணைந்து பெரு நிறுவனங்கள் பத்திரச் சந்தையில் குவாண்டம் / துளிமக் கணினி மூலம் இயக்கப்பட்டப் படிமுறை வர்த்தகத்தினைச் செயல் விளக்கிக் காட்டியுள்ளது.
- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) பிராந்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் ஸ்ரீ விவேகானந்த் குப்தா, 2025–26 ஆம் ஆண்டிற்கான பொது நிதி சொத்து மேலாண்மை (PFAM) திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - PFAM திட்டம் ஆனது உலக வங்கி மற்றும் மில்கென் நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த ஒரு மதிப்புமிக்க முன்னெடுப்பாகும்.
- மும்பையைச் சேர்ந்த ஜினாலி மோடி, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) 2025 ஆம் ஆண்டிற்கான புவியின் சிறந்த இளம் சாதனையாளர் விருதை வென்றுள்ளார்.
    - கென்யாவைச் சேர்ந்த ஜோசப் நுகுதிரு மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த நோமி ஃப்ளோரியா ஆகியோர் இந்த விருதை வென்ற மற்ற வீரர்கள் ஆவர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கட்டுமான நடவடிக்கைகளுக்குத் தடை - பள்ளிக்கரணை சதுப்பு நிலம்

- பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து ஒரு கிலோமீட்டருக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கட்டுமான நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (NGT) உத்தரவிட்டுள்ளது.
- பெரும்பாக்கம் சதுப்பு நிலத்திற்குள் குப்பை கொட்டுதல் மற்றும் கட்டுமானப் பணிகள் நடைபெறுவது குறித்த ஊடக அறிக்கைகளின் அடிப்படையில் தேசியப்

பசுமைத் தீர்ப்பாயத்தினால் தானாக முன்வந்து இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டது.

❖ சதுப்பு நில எல்லையிலிருந்து 246 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பெரும்பாக்கம் கிராமம் பாதிக்கப்பட்ட இடமாக அடையாளம் காணப்பட்டது.


❖ பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஆனது 2022 ஆம் ஆண்டில் ராம்சர் தளமாக அறிவிக்கப் பட்டது மற்றும் வெள்ளப் பாதிப்புத் தணிப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

❖ தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம் (TNSWA) ஆனது தற்காலிகமாக நிலப்பரப்பியல் மற்றும் நீர்நிலையியல் கருவிகளைப் பயன்படுத்தி ஒரு கிலோமீட்டர் இடையக மண்டலத்தினை நிர்ணயித்துள்ளது.




# தேசியச் செய்திகள்


## நீர் பாதுகாப்பு குறித்த தேசிய முன்னெடுப்பு




❖ மத்திய அரசானது, 'நீர் பாதுகாப்பு குறித்த தேசிய முன்னேடுப்பினைத்' தொடங்கி உள்ளது.

- நீர் வளங்களின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்களுடன் நீர்ப் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.
- நீர்ப் பற்றாக்குறை உள்ள கிராமப்புறத் தொகுதிகளில் நீர் தொடர்பான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் அட்டவணையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ், வேளாண் குளங்கள், தடுப்பணைகள் மற்றும் சமூக ஏரிகள் போன்ற 1.25 கோடிக்கும் மேற்பட்ட நீர் வளங்காப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.
- ‘அமிர்த சரோவர்’ திட்டத்தின் கீழ், முதல் கட்டத்தில் மட்டும் 68,000க்கும் மேற்பட்ட நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டுள்ளன அல்லது புனரமைக்கப் பட்டுள்ளன.

## மருத்துவப் படிப்பிற்கான இடங்களின் விரிவாக்கம்





- இந்தியாவில் மருத்துவக் கல்வியை விரிவுபடுத்துவதற்கான மத்திய நிதியுதவி திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசு கல்வி நிறுவனங்களில் மொத்தம் 5,000 முதுகலை மற்றும் 5,023 இளங்கலை (MBBS) மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் சேர்க்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் தற்போதுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள், தனித்து இயங்கும் முதுகலை கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துவதும் அடங்கும்.
- இந்தியாவில் மருத்துவப் படிப்புகளுக்காக தற்போது 1,23,700 இடங்களைக் கொண்ட MBBS சேர்க்கைத் திறன் கொண்ட 808 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.

## வாக்காளர் பதிவு புதுப்பிப்புகள்

- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ECINET வலை தளம் மற்றும் செயலியில் ஒரு புதிய இணைய வழி கையொப்ப அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வாக்காளர் விவரங்களைப் பதிவு செய்ய, நீக்க அல்லது சரி செய்ய, விண்ணப்ப தாரர்கள் தற்போது ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்களைப் பயன்படுத்தி தங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க வேண்டும்.
- இந்தச் செயல்முறையானது, மேம்படுத்தப் பட்ட கணினி மேம்பாட்டு மையத்தினால் (CDAC) மேலாண்மை செய்யப்படும் வெளிப்புற வலை தளம் மூலம் ஆதார்

அடிப்படையிலான OTP சரிபார்ப்பை உள்ளடக்கியது.

- வாக்காளர் வாக்குப்பதிவு அறிக்கையிடல் மற்றும் தேர்தல் தரவுகள் கையாளுதலை ஒழுங்குபடுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத இடைத்தேர்தல்களின் போது இது முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.





## உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாடு 2025




- மத்திய சுகாதார அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாட்டின் (GFRS) முத்திரைச் சின்னம் மற்றும் சிற்றேட்டை வெளியிட்டது.
- இந்த உச்சி மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலக உணவு இந்திய நிகழ்வினைச் சார்ந்து நடைபெற்றது.

- ❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) ஆனது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இந்த உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்கிறது.
- ❖ இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, "Evolving Food Systems – Yatha Annam Tatha Manah" என்பது ஆகும்.

## இந்தியக் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் எழுத்தறிவு




- ❖ இந்த அறிக்கையானது மத்திய மற்றும் மாநிலப் புள்ளி விவர அமைப்புகளின் 29வது மாநாட்டில் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டது.
- ❖ 5 முதல் 9 வயது வரையிலான இந்தியக் குழந்தைகளில் சுமார் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளில் அதிக அளவிலான ட்ரைகிளிசரைடு அளவுகள் உள்ளன.
- ❖ மேற்கு வங்காளம் (67%), சிக்கிம் (64%), அசாம் (57%), நாகாலாந்து (55%) மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் (50%) ஆகிய பகுதிகளில் அதிக ட்ரைகிளிசரைடு பாதிப்பு காணப் படுகிறது.
- ❖ அதிகாரப்பூர்வத் தரவுகளின்படி, கேரளா (16.6%) மற்றும் மகாராஷ்டிரா (19.1%) ஆகிய மாநிலங்களில் மிகக் குறைந்த பாதிப்பு காணப்படுகிறது.
- ❖ நாடு முழுவதும் 48% புதிதாக பிறந்த பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்புகளுக்கு (முன் கூடிய பிரசவம்) குறைபிரசவம் மற்றும் பிறப்பின் போதான குறைந்த எடை காரணமாக அமைந்தது.
- ❖ பிறக்கும் போதே ஏற்படும் மூச்சுத் திணறல் மற்றும் அதிர்ச்சி ஆகியவை 16% புதிதாக பிறந்தப் பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பிற்கும், அதே நேரத்தில் நிமோனியா 9% குழந்தைகளின் உயிரிழப்பிற்கும் பங்களித்தது.
- ❖ இந்தியாவின் பதின்ம வயதினரில் சுமார் 5% பேர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப் பட்டுள்ளனர், டெல்லியில் அதிகபட்சமாகவும் (10%), அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (8.6%), மணிப்பூர் (8.3%) மற்றும் சத்தீஸ்கர் (7%) ஆகியவற்றில் அதிக பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- ❖ இந்தியாவில் சுமார் 16 சதவீதத்திற்கும் மேற்பட்ட இளம் பருவத்தினரில் அதிக

ட்ரைகிளிசரைடு அளவு பதிவாகியுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான தேசிய கல்வியறிவு விகிதம் 63.1% ஆகும் என்பதோடு இது ஏழு வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 73.1% ஆக உயர்ந்துள்ளது.
- பல்வேறு வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே கல்வியறிவு ஆனது 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பதோடு சிறுமிகளில் சற்று குறைந்த விகிதங்களே இருந்தாலும் 81 சதவீதத்திற்கும் அதிகமாகவே இது பதிவாகியுள்ளது.

## 8வது வருடாந்திர ஒப்பந்ததாரர்கள் கூட்டம் 2025




- புவி அறிவியல் அமைச்சகமானது, சர்வதேச கடல்படுக்கை ஆணையத்தின் (ISA) 8வது வருடாந்திர ஒப்பந்ததாரர்கள் கூட்டத்தினை கோவாவில் நடத்தியது.
- கோவாவின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) தேசிய கடல் சார் ஆய்வு நிறுவனம் (NIO) ஏற்பாடு செய்த நிகழ்வில் ரஷ்யா, ஜப்பான், சீனா மற்றும் பிற நாடுகள் உட்பட 14 ISA ஆய்வு ஒப்பந்ததாரர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- இந்தக் கூட்டமானது ஆழ்கடல் ஆய்வு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் சார்ந்த கவலைகள், ஒப்பந்த இணக்கம் மற்றும் நிலையான கடல் வள மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இந்தியா இந்தியப் பெருங்கடலில் பல் கனிமச் சல்பைடுகளுக்கான (PMS) இரண்டு ஆய்வு ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளதோடு ISA ஆணையத்தின் கீழ் இத்தகைய இரட்டை ஒப்பந்தங்களைக் கொண்ட ஒரே நாடு இந்தியாவாகும்.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று இந்தியாவின் புவி அறிவியல் அமைச்சகத்திற்கும் ISA ஆணையத்திற்கும் இடையே இரண்டாவது PMS ஆய்வு ஒப்பந்தமானது கையெழுத்தானதைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெற்றது.

# சர்வதேசச் செய்திகள்

## கத்தாரில் UPI

- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக (UPI) வலையமைப்பில் இணைந்த எட்டாவது நாடாக கத்தார் மாறியுள்ளது.
- QR குறியீடு அடிப்படையிலான UPI கட்டணங்களைச் செயல்படுத்துவதற்காக கத்தார்

தேசிய வங்கியானது NPCI சர்வதேச கொடுப்பனவுகள் லிமிடெட் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது.

- இந்தப் புதிய அமைப்பானது இந்தியப் பயணிகள் கத்தாரில் உள்ள கடைகள் மற்றும் சுற்றுலா தலங்களில் உடனடியாக டிஜிட்டல் வழியில் பணம் செலுத்த அனுமதிக்கிறது.
- UPI அமைப்பினைப் பயன்படுத்தும் பிற நாடுகளில் பூடான், பிரான்சு, மொரீஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை அடங்கும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அக்னி-பிரைம் எறிகணை





- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் உத்தி சார் படைகள் கட்டுப்பாட்டுப் பிரிவு (SFC) அக்னி-பிரைம் எறிகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தன.
- முழுமையானச் செயல்பாட்டுச் சூழ்நிலைகளின் கீழ் இரயில் அடிப்படையிலான இடம் விட்டு இடம் நகரக் கூடிய ஏவு அமைப்பிலிருந்து இந்த சோதனை நடத்தப்பட்டது.
- அக்னி-பிரைம் என்பது 2000 கிலோமீட்டர் வரையிலான தாக்குதல் திறன் கொண்ட ஒரு

இடைநிலை தாக்குதல் தூர வரம்புடைய எறிகணையாகும்.

- ❖ இரயில் அடிப்படையிலான ஏவுதல் அமைப்பு ஆனது எந்தவித வெளிப்புற உதவியும் இன்றி, இரயில் வலையமைப்பு முழுவதும் இயங்கக் கூடியது மற்றும் குறுகிய எதிர் நடவடிக்கை காலத்துடன் எறிகணையினை ஏவக் கூடியது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## RVTR வளங்காப்பகத்தில் மீன்பிடிப் பூனை




- ❖ ராஜஸ்தானின் புண்டியில் உள்ள இராம்கர் விஷ்தாரி புலிகள் வளங்காப்பகத்தில் (RVTR) முதல் முறையாக மீன்பிடிப் பூனை தென்பட்டுள்ளது.
- ❖ இங்கு மீன்பிடிப் பூனை காணப் பட்டதுடன், இந்த வளங்காப்பகத்தில் உள்ள சிறியப் பூனை இனங்களின் மொத்த எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.
- ❖ மீன்பிடிப் பூனை ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "எளிதில் பாதிக்கப் படக் கூடிய இனம்" ஆகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ❖ இது ஒரு காப்பகத்தின் சுற்றுச்சூழல் செழுமையை உறுதிப்படுத்தி, ஆரோக்கியமான ஈர நிலங்கள் மற்றும் ஆற்றங்கரை சுற்றுச்சூழல் அமைப்புகளின் இனக் குறிகாட்டி இனமாக உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் தேசியப் பூங்கா

- ❖ ஜார்க்கண்டில் உள்ள பலாமு புலிகள் வளங்காப்பகத்தின் ஒரு பகுதியான பெட்லா தேசியப் பூங்காவில் முதல் வகையான செயற்கை நுண்ணறிவில் இயக்கப்படுகின்ற இயற்கை தொடர்பு மையம் நிறுவப்பட உள்ளது.
- ❖ இந்த மையம் ஆனது செயற்கை நுண்ணறிவு உதவியாளர்கள், முப்பரிமாண ஒளிப் படவியல் திரையிடல், மிகை மெய்த் தோற்றங்கள் மற்றும் உள்ளார்ந்த ஒலி உணர்வு அம்சங்கள் உள்ளிட்ட மேம்பட்டத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்.
- ❖ இந்த மையமானது விலங்குகளின் நடமாட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு செயல்பாடுகளை உருவகப்படுத்தி ஒரு உள்ளார்ந்த இயற்கை தொடர்பு அனுபவத்தை

உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்தப் பூங்காவின் கருத்துரு, "Threads of Nature" என்பதாகும்.




## பட்டு மேம்பாட்டிற்கான விருது




❖ ஆந்திரப் பிரதேச மாநிலமானது பட்டு மேம்பாட்டிற்கான சிறந்த மாநில விருதைப் பெற்றுள்ளது.


❖ இந்த விருது ஆனது மத்தியப் பட்டு வாரியத்தின் மேரா ரேஷம் - மேரா அபிமான் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக வழங்கப்படுகிறது.

❖ இந்த விருது ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று பெங்களூருவில் நடைபெற்ற மத்திய பட்டு வாரியத்தின் 76வது நிறுவன தினத்தின் போது வழங்கப் பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## SL பைரப்பா மறைவு

- கன்னட எழுத்தாளரும் சரஸ்வதி சம்மன் விருது பெற்றவருமான S.L. பைரப்பா அவரது 94 வது வயதில் காலமானார்.
- அவரது முதல் புதினமான பீமகாயா 1958 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- பெண்களின் பார்வையில் இராமாயணத்தை மீண்டும் எடுத்துரைத்த உத்தரகாண்டா (2017) எனும் அவரது கடைசி புதினத்துடன் அவர் 25 புதினங்களை எழுதியுள்ளார்.
- மகாபாரதத்தின் மறுகதையான பர்வா (1979), வம்சவ்ரிக்சா (1965) மற்றும் க்ருஹ பங்கா (1970) ஆகிய அவரது புதினங்கள் கன்னட இலக்கியத்தின் மிக உன்னதமான படைப்புகளாகக் கருதப்படுகின்றன.
- 2010 ஆம் ஆண்டில் தனது மந்த்ரா (2001) புதினத்திற்காக சரஸ்வதி சம்மான் விருதை வென்றார்.
- அவருக்கு 2023 ஆம் ஆண்டில் பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## உலக வெறிநாய்க் கடி நோய் தினம் 2025 - செப்டம்பர் 28

- வெறிநாய்க் கடி நோய் குறித்த விழிப்புணர்வை ஆதரிப்பதற்கும் அதைத் தவிர்க்கச் செய்வதற்குமான பல்வேறு வழிகளைப் பற்றி நன்கு விவாதிப்பதற்கும் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- 1895 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் தேதியன்று மறைந்த பிரெஞ்சு அறிவியலாளர் லூயிஸ் பாஸ்டருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

- இந்த விலங்கு வழி வைரஸ் தொற்று நோய் ஆனது ஒரு வெறி பிடித்த விலங்கின் கடி அல்லது கீறல் மூலம் பரவி, மனிதனின் மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Act now: you, me, communities" என்பதாகும்.




## உலக நதிகள் தினம் 2025 - செப்டம்பர் 28

- இத்தினமானது செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இது பொது விழிப்புணர்வை அதிகரிப்பதையும், உலகெங்கிலும் உள்ள அனைத்து நதிகளின் மேம்பட்ட மேலாண்மையினை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது பிரிட்டிஷ் கொலம்பியாவின் பர்னபியைச் சேர்ந்த கனடா நாட்டினைச் சேர்ந்த வளங்காப்பாளர் மார்க் ஏஞ்சலோவால் நிறுவப்பட்டது.





## உலக இருதய தினம் 2025 - செப்டம்பர் 29

- இத்தினமானது, இருதய ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புற்றுநோய் மற்றும் நாள்பட்ட சுவாச நோய்கள் ஆகியவற்றினால் ஏற்படும்

உயிரிழப்பினை விட அதிகமான உயிரிழப்பினை ஏற்படுத்தும் இருதய நோயால் (CVD) ஐந்தில் ஒருவர் முன் கூட்டியே உயிரிழந்துவிடுவார்கள்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Don't Miss a Beat" என்பதாகும்.




## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் 2025 - செப்டம்பர் 30




- மொழியியல் மற்றும் கலாச்சாரப் பிளவுகளை மிகவும் நன்கு இணைப்பதில் மொழி பெயர்ப்பாளர்களின் விலைமதிப்பற்றப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக இந்தத் தினம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தேதியானது மொழிபெயர்ப்பாளர்களின் புரவலராகக் கருதப்படும் புனித ஜெரோமின் மறைவு நாளுடன் ஒத்துப்போகிறது.
- புனித ஜெரோம், பைபிளின் புதிய ஏற்பாட்டின் கிரேக்க கையெழுத்துப் பிரதிகளின் பெரும்பாலான பகுதியை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்ததற்காகப் பெரும் புகழ் பெற்றவர் ஆவார்.
- எபிரேய நற்செய்தி நூல்களின் சிலப் பகுதிகளையும் அவர் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தார்.
- UNESCOவின் இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Unveiling the Many Faces of

Humanity" என்பதாகும்.


# இதரச் செய்திகள்

## பைட்டோசர் புதைபடிவம்

- ஜெய்சால்மரின் மேகா கிராமத்தில் உள்ள ஹர்பாலின் குளத்திற்கு அருகில் கண்டெடுக்கப் பட்ட புதைபடிவ எச்சங்களில் மரம் போன்ற கற்கள் மற்றும் ஒரு பெரிய முதுகெலும்பு அமைப்பு ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இவற்றின் ஆரம்பக் கட்ட மதிப்பீடுகள் இந்தப் புதைபடிவமானது பிற்கால ட்ரயாசிக் அல்லது ஜுராசிக் காலத்தைச் சேர்ந்த ஒரு வரலாற்றுக்கு முந்தைய ஊர்வன இனங்களின் பாகங்களாக இருக்கலாம் என்று கூறுகின்றன.
- தெளிவான முதுகெலும்பு அமைப்பினைக் காட்டுகின்ற இந்தப் புதைபடிவமானது சுமார் 6-7 அடி நீளமும் 3-4 அடி அகலமும் கொண்டது.
- ஜெய்சால்மரில் டைனோசர் கால் தடங்கள் மற்றும் 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய கடல் சார் எச்சங்கள் உள்ளிட்ட புதைபடிவங்களின் மிக வளமான வரலாறு உள்ளது.




## கேரளாவில் உள்ள வர்கலா குன்று



- கேரளாவின் வர்கலா குன்று, அதன் அரிய மியோ-ப்ளியோசீன் மணற்கல் மற்றும் செம்புரைக்கல் (லேட்டரைட்) கல் அமைப்புகளுக்காக யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்த குன்றில் புதைபடிவங்கள் மற்றும் பண்டைய காலநிலைப் பதிவுகள் உள்ளன என்பதோடு இவை அறிவியல் ரீதியாக விலை மதிப்பற்றதாக இருந்தாலும் புவியியல் ரீதியாக சேதமடையக்கூடியதாக உள்ளன.
- இது 2,000 ஆண்டுகள் பழமையான ஜனார்த்தன சுவாமி கோயில் மற்றும் சிவகிரி மடம் அருகிலுள்ள ஒரு புனித தலமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★